முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1451

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.09.2023,** செவ்வாய்கிழமை

1. ஞான கீர்த்தியே அரங்கா
ஞான சித்தியே தேசிகா
வானவர்கள் மெச்சுகின்ற அரங்கா
வாழும் ஞானியே ஞான தேசிகா
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 02 ம் நாள், 19.09.2023, செவ்வாய்கிழமை)
ஆசிதந்து உன்னுள் யானிருக்க
அரங்கா என உன் நாமஜெபம்
3. சொல்லி எவர் உன்பால்
சரணடைவு கொள்கின்றாரோ
அவர்கட்கெல்லாம் ஆறுமுகன் என் அருளும் தயவும்
ஆற்றல்பட ஆசி பலமும் உண்டு உண்டு
4. பெருமைபட உன் தர்மத்தை கையில் எடுத்து
பொருளுதவி செய்து கொண்டு உடல் உழைப்பு தருகின்ற
தருகின்ற அன்பர்கள் அனைவருக்கும்
தணிகாசலன் என் பேரருள் உண்டுஉண்டு
5. வறுமை வெல்ல உலகை நோக்கி
வள்ளலாக உன் சக்தி கண்டு இறங்கி தொண்டாற்றும்
ஆற்றுகின்ற தொண்டர் படைகளே
அகிலத்தை மாற்றும் மகா சக்தியாகும்
6. வகைபட அன்னதனால் உலகோர்
வணங்கி அரங்கன் உன் திருவடி பற்றி
சரணாகதி கொண்டு வந்தால் போதும்
சடுதி இந்த பேருலகம் ஞானலோகமாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–